# அழகின் முழுமையே தாயே

அழகின் முழுமையே தாயே
அலகையின் தலை மிதித்தாயே
உலகினில் ஒளி ஏற்றிடவே
அமலனை எமக்களித்தாயே

**1**
இருளே சூழ்ந்;திடும் போதே
உதயத் தாரகை போல
அருளே நிறைந்தமா மரியே
அருள் வழி காட்டிடுவாயே

**2**
அன்பும் அறமும் செய்வோம்
அன்னை உனைப்பின் செல்வோம்
உன்னைத் துணையாய்க் கொள்வோம்
என்றும் பாவத்தை வெல்வோம்